**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.60/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 4 |
| Name (திரு/திருமதி) | : தில்லை வேலு |
| Father's Name/ Husband's Name | : மாணிக்கம் |
| Village & Taluk | : கோடிக்கொள்ளை |
| Calling | : -- |
| Age | : 85 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.04.2026**

3ம் எதிரி ஆஜர். 1,2,4 முதல் 7 மற்றும் 9ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.) 8ம் எதிரி சட்டத்திற்கு முரணான சிறுவர் என்பதால் அவர் மீதான வழக்கு JJB நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

1. அ.சா.1 வேல்முருகன் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். கடந்த 02.11.2011 அன்று காலை 09.00 மணிக்கு அ.சா.1 வேல் முருகன் என்பவர் JCB யை எடுத்து வந்து எங்கள் ஊர் சுடுகாட்டு பாதையில் உள்ள செடிகளை சுத்தம் செய்து கொண்டிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அப்போது நானும், எங்கள் ஊரை சேர்ந்த காமராஜ், சண்முகம், கல்யாணராமன், சாமிநாதன், ஆகியோர்கள் அந்த இடத்தில் இருந்தோம் என்றால் இல்லை. அப்போது ஆஜர் எதிரி வேல் முருகன் என்பவரை தகாத வார்த்தைகளால் திட்டி, தடி மற்றும்

கடப்பாரை, மண்வெட்டி ஆகியவற்றால் தாக்குவதாக கூறி கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் நடந்த சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு அதனை காவலர்கள் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.60/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 5 |
| Name (திரு/திருமதி) | : கல்யாணராமன் |
| Father's Name/ Husband's Name | : தொப்பைசாமி |
| Village & Taluk | : கோடிக்கொள்ளை |
| Calling | : விவசாயம் |
| Age | : 55 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.04.2026**

3ம் எதிரி ஆஜர். 1,2,4 முதல் 7 மற்றும் 9ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.) 8ம் எதிரி சட்டத்திற்கு முரணான சிறுவர் என்பதால் அவர் மீதான வழக்கு JJB நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

1. அ.சா.1 வேல்முருகன் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 15 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் சுடுகாட்டு பாதையை வேல் முருகன் என்பவர் செடிகளை சுத்தம் செய்து கொண்டிருந்தார் அப்போது எதிரி வேல்முருகன் என்பவரிடம் பிரச்சனை செய்தார். அங்கு வேறு யார் இருந்தார்கள் என்பதை நான் கவனிக்கவில்லை. காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். கடந்த 02.11.2011 அன்று காலை 09.00 மணிக்கு அ.சா.1 வேல் முருகன் என்பவர் JCB யை எடுத்து வந்து எங்கள் ஊர் சுடுகாட்டு பாதையில் உள்ள செடிகளை சுத்தம் செய்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். அப்போது நானும், எங்கள் ஊரை சேர்ந்த தில்லைவேல், சண்முகம், சாமிநாதன், ஆகியோர்கள் அந்த இடத்தில் இருந்தோம் என்றால் சரிதான். அப்போது ஆஜர் எதிரி வேல் முருகன் என்பவரை தகாத வார்த்தைகளால் திட்டி, தடி மற்றும் கடப்பாரை, மண்வெட்டி ஆகியவற்றால் தாக்குவதாக கூறி கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் ஞாபகம்

இல்லை. நான் நடந்த சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு அதனை காவலர்கள் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.